The situation has not changed in the United States, Sherman occupies Atlanta but Hood has not evacuated Georgia and is entrenching himself at Lovejoys, Ferragut is before Mobile and is waiting for the army on land commanded by General Granger, before attempting assault, Grant is still at Weldon, threatening Pittsburg from the 25th to the 28th Agust, the Confederates renewed their attempts to dislodge him, but he held his own, and after a sanquinary conflict Hanwick remained master of the Railway. Petersburg is consequently besieged on both sides. Lee understands thoroughly the critical nature of the situation, he has recalled Carly's Corps from the Fhenandoah; he is concentrating his forces aronnd Petersburg before long the two armies will meet and from this decisive struggle will defend the fate of Petersburg perhaps of Richmond.

The resources of the Confederates are exhausted, they fight with admirable energy but courage alone does not suffice; every day bullets make great holes in their ranks and they cannot fill up the vacancies, children of 15 and old men of 60 are to be found in the Camp, there are no new men to replace the dead. Grant was right when he said "if the Northern united, the war is not far from its termination."

Will the North remain united? The rebels have active and energetic allies, the chiefs of the Democrating party the *Copperheads*, neglect no means to sow discord among the Federals, Leymour, Walladingham, Wood, organize the Campaign against Lincoln, Leymour opposed recruiting in the state of New-York, alleging that the Naval recruits embarked on board Federal vessels and furnished by the state of New-York, was already greater than the number of the contingent to be furnished by the state, it was almost sufficient to cause an insurrection. Happily the recent viciories of the Federal armies, allowed the Union Government to be liment, he allowed the reclamation of Leymour, who had some grounds for his statement, he reduced the levy he had ordered from 500,000 to 300,000 men, and of these 300,000 conscripts only 100,000 are destined for the army of the of the Potomac, Grant having declared that this number would suffice for him, the remainder are destined for garrison service.

The solemn hour of the great election approaches; the enemies of Lincoln redouble their activity; it was on the 25th August the convention of Democrats assembled at Chicago. The Democratic party is divided into two sections; *the peace Democrats* and the *war Democrats*. It is a question of uniting them, Leymour and Walladingham had long since prepared the ground, by a sort of compromise agreed on beforehand, the same candidate was to satisfy the two parties, McClellan the presidential candidate represented the *War Democrat*, those who wish to maintain the Union and Pendleton the candidate for Vice President represented the *Peace democrat*'s those who accept the separation from the South, the programme (platform) of the convention was indited in terms acceptable to both parties, thanks to these precautions they are completely of accord.

However the party of peace at any price, the successionists in disguise, have been beaten since the programme they have accepted is in formal contradiction with their doctrines, it bears in effect these characteristic words "*Fidelity to the Union*" it demands an immediate armistice and a congress of all the States both North and South, will be represented and will establish the laws of the Union. The orators of the convention insisted on this point. *Not a single star, said M. Belmout, must be wanting in the flag of the Union.*"

All were unanimous in attaching the politics of Lincoln. *His blind fanatism against an institution of certain states. Let us overthrow this detestable Government* said the president. It is the republicans that have destroyed the *allusion* cried the clamorous M Leymout (of New-York) the democrats alone can re-establish it. The maintenance of the Union then may be seen as well in the speeches of the Democrats as in the programme improved on the candidates.

McClellan himself was, and still is a Unionist, when still is a general he wrote to Lincoln, The constitution and the Union must be preserved no matter what amount "of time money and blood it may cost." In accepting the candidateship he took care to shew that his opinions had not varied on this point, and replied to the deputies of the convention. *The Union before every thing, and at any price*! "Is this clear? The only point on" which he differs from Lincoln is that, he desires to maintain slavery, it was this which especially fitted him for a Democratic candidate, he is a decidedly slavery man, but he is decidedly a Unionist *before all and at any price*

The couclusion is evident. Supposing McCllelan to be victorious there will be an armistice and a congress. Concessions will be offered to the South, slavery will be maintained, the customs tarifs will be lowered, but peace will only be made on the basis of the Union, the South (its statesmen have often declared it before the separation at any price) its conciliation is impossible. McClellan will be forced to wage a war of extermination, and to do precisely as Lincoln has done. The ball is rolling? The programme of Chicago is but an enormous contradiction which has brought about another which is that to make peace they have chosen whom? A general.

McClellan will not be under the painful necessity of seeing his peace congress terminate to the sound of the cannon. the American people is endowed with much practical good sense, which rarely quits it, it understands the inability of a change of persons, when the inevitable result will be the same. The dangers of an armistice which would singularly compromise the advantages obtained by the Federals and also the immorality of re-establishing slavery which is nearly abolished. Let Grant be successful before Petersburg, and *Old Abe* will triumph Lincoln president is the definitive abolition of slavery, and the integrity of the great American Republic.

## CHAVAGACHERRY.

The great thing that engages the attention of the people up here is the escape from prison of the young Brahmin who was committed for trial before the Supreme Court. He was seen by different men at different times, off Codigamo and on all those occasions the fellow, I hear, begged of them not to say a word about him to others. It appears that he moves about in the District free and does not appear to entertain much fear of his being apprehended again. This is very funny indeed, but it is a fact. I also hear that he is raising money, assisted by his relations, to enable him for a passage to Pondicherry.

Persons that were concerned in the case in which he was tried for Burglary are in great fear of the rascal and that some of them I hear, are actually, keeping guards to their houses every night lest the Brahmin should do them injury at an unexpected hour. It is a pity that the Government makes no attempt whatever for apprehending the prisioner. I think some Circular offering a reward to those that will apprehend or give such informations as may lead to the apprehension of the prisioner, ought to be publihed and I have no doubt that some such thing will bring the fellow to justice. It is indeed unjust on the part of our Government to keep themselves quite and not care a fig for the proper administration of justice.

The Maniagar of Tenmorache, the richest man on this side of the salt river, is very sick and I can say, is in a very precarious condition. His life is much feared both by himself and those that have seen him and it would be no wonder if we should be told in one of these days that he is numbered with the dead.

We have had very heavy and continual down pours of rain and the earth looks quite revived and green. The harvest of this year promises much and our desire is that we may not be disappointed.

There is another thing in our District which does our heart good to think upon and I think I ought not to omit giving it a mention here. Our Court is clear of all cases that have been in arrear and in fact there are very few cases in the Calendar. It is this state of things that we expect from a Magistrate and no doubt this will do much towards the welfare and well being of the community at large. More Anoun.

27th, Oct. 1864 S. V.

## POINT PEDROE.

(From our correspondent.)

The Customs is floded with articles of various descriptions: Paddy has been imported in very large quantity. Cloth, opium, and other sundries, have been strewed, in an around the Customs. As the Port is about to be closed, vessals have been dispatched to, and from our Port, to make the necessary import and export. The traders of Trincomalie have recently brought in various commodities to be stored, during the winter, for the use of their Customers. The Officers of the Customs have been awfully busy. The Landing Waiter, the Shroff, and the subordinate Officers, with their superiors at the helm, have been alertly despatching their respective functions, aiding and assisting each other, with a view to discharge the cargo of several vessels, which were on tip-toe, to secure their shelter from the risks of the forthcoming change of the monsoon. Messrs S. Vitilingam and Canagasavey have made their last import of jaggerry, and quitted our Port, bidding adiew to their several friends.

There has been much excitement at Valvettetorre, owing to the arrival, after a long very long, absence, of Mr. T. Coolandavaloepulle, who has been visited by numerous friends, relatives and acquaintances, from various quarters of our Peninsula. On the night of the 13th Inst. Mr. Mylvaganam, Proctor, entertained him, as well as many other friends of his, in his Office at Point Pedro, and delighted them with the melodious strains of Tamil Musicians. There was on the night of the 15th Inst. another dinner party, in a Bungalow at Caranavoy, in which the Maneagar of our district, Mr. S Vitilingamodaliar, entertained Mr. Colandavaloepulle along with many other respectable people, imparting them the pleasures arising from the usual accompaniments of Tamil Music. I need hardly observe that the guest has here, as well as elsewhere, won the esteem and best wishes of many other Native and European.

We have had occasional good showers of rain, which contribute in no small degree to enrich the Paddy plants, which wear an attractive green verdure. We have every prospect of a good harvest.

The arrears in our Court are being speedily cleared. We have frequently an influx of counsils from Jaffna, who generally have Fridays' allotted for their cases. There is no considerable increase in civil business.

16th October 1864.

## GRAVE AND GAY.

**Maidservant.**—A maiden enters upon a situation with a fair character. She has worked so as to deserve and win one. But a character, like a building, willl not last for ever. It wants keeping up; and unless it be sustained it will go down. There may be no gross or daring departure from duty; and this is not necessary to the ruin of a reputation. General slothfulness, a loose and loitering habit, staying on the way home from church or chapel to gossip with other servants, the practice of being a little too late with her work, small neglects—these things undermine the confidence of a mistress; and the servant who thus trifles will soon be in the worst of all positions—without a character. She had one, but did not take any trouble to keep it up and by slothfulness it decays and perishes.

**Life** is a thing which many people in a great hurry to get rid of, if we may judge by the number of "fast" young men now-a-days, who use themselves up with the greatest apparent satisfaction.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்காபிமானி.

துன்மதி௵ ஐப்பசி மீ உஅ ௳.

## ORIENTAL BANK CORPORATION.

### விளம்பரம்.

### ஒறியேன்றல் வங்குச்சாலை.

இதன் உதவிச்சாலையொன்று சென்றமாதம் ௰௬ ந் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து இப்பொழுது நடைபெற்றுவருகிறது.

நடப்படியான பணவைப்புக் கணக்குக்காரியங்கள் இப்பொழுது அதிற் தொடங்கப்படலாம்.

சேமத்திற்காய்க் கட்டும்பணங்கள் ஒருமாசம், இரண்டுமாசம், ஆறு மாசக்காலங்களுக்கு அவ்விடம் வைக்கப்படலாம். அப்படி வைக்கப்படும் பணத்திற்கு வருடமொன்றிற்கு முறையே நூற்றுக்கு, மூன்று, நாலு, ஆறுவீதம் வட்டிகொடுக்கப்படும். பணச்சேகரிப்பிற்காய் அந்தந்த இடங்களுக்குரிய கைச்சீட்டுகளும் ஏற்கப்படும்.

தலைஸ்தானத்திலிருந்து இத்திரவியசாலையைச்சேர்ந்த சகல கிளைச்சாலையின் பேருக்கும், சென்னைத் திரவியசாலையைச்சேர்ந்த கொச்சியின் உதவித் திரவியசாலையின் பேருக்கும், ஸ்கொற்லந்தைச்சேர்ந்த தேசத்திற்கும், மாகாணத்துக்கும், வர்த்தகத்துக்குமடுத்த சகல கிளைத் திரவியசாலைகளின் பேருக்கும், அயலந்தைச்சேர்ந்த மாகாணத் திரவியசாலைகளின் பேருக்கும் உண்டிகள் கொடுக்கப்படும்.

உண்டி மாற்றுதலுக்குரிய கழிவு முதலானகாரியங்களின் விவரங்களை இத்திரவியசாலையிற்தானே தெரிந்துகொள்ளலாம்.

ஆர். வி. டன்லோப், உதவிக்காரியகர்த்தர்.
ஏ. எவ். வில்ஸ்வோட், சம்பிரதிக்கணக்கர்.

---


## விளம்பரம்.

சென்னபட்டணத்தில் முதற்தரத்தில் இலேஞ்சி இதன்கீழ்க் கையொப்பம் வைத்திருக்கிறவரிடம் மூன்றுமுழம் ௰க சிலிங்காகக் கைப்பணத்துக்கு வாங்கிக்கொள்ளலாம்.

சி. கனகரத்தினம்.

மானிப்பாய்.


---

## Kandy Mercantile Bank Shroff.

### கண்டி மேர்கன்றயில் வங்குச் சிருப்பு.

ம. ஶ. ஶ. அரியகுட்டியென்பவர் மேற்சொல்லிய வங்கில் ஏறக்குறைய நாலாயிரம் பவுணைப் பொதுக்கினாரென்ற குற்றச்சாட்டில் அவரைப் பிடிக்கிறதற்காய் விருந்துதிரிகிறதென்பதாய் கொழும்புப் பத்திரிகைகளினாலும் வேறு இரகசியக் கடிதங்களினாலும் நாம் அறியவருகிறோம். இன்றுகாலமே நமதுகையில் வந்த ஓர்கடிதத்தினால் இவருக்கிந்த வில்லங்கத்தை வருவித்தவர் அவ்வங்கிச்சாலையில் உத்தியோகமாகவிருக்கும் ஓர் ஐரோப்பியத்துரையினால் வந்ததென்றும் இவர் சரீரசவுக்கியவீனமாகவிருக்குங்காலையில் அத்துரை முன் இவரிடங் கொடுத்துப் பணமவாங்கியிருந்த பற்றுச்சீட்டுகளைக் கையாடிக்கொண்டு இவரை இவ்வித மோசமான நிலைபரத்தில் கொண்டுவந்திருப்பதாக அறியவருகிறோம். நேரமின்மையால் இம்முறை இதுகாரியத்தைப்பற்றி அதிக விஸ்தாரமாயெழுதாமலொழித்து மறுமுறைக்கென்று நிறுத்திவைக்கிறோம்.

---

## வேளாண்மை.

எமதுதேசவிருத்தியே பிரியமாய்க்கொண்ட எங்கள் ஏசன்றுத்துரை போனவெள்ளிக்கிழமை வன்னிப்பயணத்தால்வந்து இப்பொழுது ஊரில் அங்கங்கு கூட்டங்கள்வைத்துத் திரிகிறார். கூட்டம் என்னத்தைப்பற்றியென்று பலரறிய விரும்புவார்கள் என்னத்தைப்பற்றியென்றால் வாய்க்கால்கள் வெட்டுவிக்கும்படியாக போனகிழமைபெய்தமழையினாலுண்டான வெள்ளம் மிக அதிகமாகயிருப்பதினால் அதைப்பாய்ச்சும்படிக்கான ஏதுசரணங்களுக்காக எத்தனிக்கிறார்கள். போனதிங்கட்கிழமை வதிரியிலும், செவ்வாய்புத்தூரிலும், புதன் மல்லாகத்திலும் இந்தவிதமாகக்கூட்டங்கள்வைக்கப்படுகின்றன. பளம்வாய்க்கால்கள் வெட்டும்படியாக ஒவ்வொருஊரிலும் தலைமைக்காரரில் பொறுப்பித்திருக்குதாம் அதற்குச் செல்லுஞ்செலவு கமக்காரர் தலையிலேதானும். புதுவாய்க்கால்கள்வெட்ட உத்தரவுபண்ணும்படி தனக்குத்தத்துவமில்லையெனறும் அதுஅவசரமென்று கமக்காரர்கண்டால் இப்பொழுது கூடியிருக்கும் ஆலோசனைச்சங்கத்தாருக்கு ஒருபெட்டிசமெழுதி ஊரவாகளைக்கொண்டு கையெழுத்துப்போடுவித்துக் கொண்டுவந்து தன்னிடங்கொடுக்கும்படியாகவும தான் உடனே அனுப்பி மறுமொழிபெறுவோமென்றும் சொன்னாராம். இவையெல்லாம் நமது கமக்காரருக்கும் நம்மூர்வெள்ளாண்மைக்கும் நயந்தகாரியந்தான் இப்படியானபொதுநன்மைக்குரிய காரியங்களெல்லாவற்றையுமபற்றி எதுமொன்றுசெய்வதற்குமுதல் பலர்கூடிக்கூட்டங்கள்வைத்து ஆலோசனைபண்ணிச்செய்வது மிகநன்று. இப்படியேமழைஅதிகமானகாலங்களில் வெள்ளத்தினால் வேளாண்மைமோசம் போகாதபடிக்கு வாய்க்கால்வெட்டுவது மிகநல்லபுத்தியும் பிரயோசனமானதுந்தான். இாதவிதமாக மழையில்லாதகாலத்திலும் வேள்ளாண்மை மோசம்போகாதபடிக்கு ஏதும்புத்திசெய்துகொண்டாலல்லவோநலம். அங்கங்குள்ளகுளங்களைவெட்டி அதிலேதண்ணீர்நிற்கும்படியாகவும் தேவையானகாலங்களில் வயல்களுக்குப்பாய்ச்சிக்கொள்ளவுந்தக்கதாகப்பண்ணிக்கொண்டால் மிகநலமாயிருக்கும். எங்கள் ஏசன்றர் இதற்கு ஏதும் சகாயஞ்செய்யவேண்டுமென்பதுதான் எமதுவிருப்பம்.

---

## Wreck.—உருச்சேதம்.

மட்டக்களப்புக்குந் திருக்கோணமலைக்கும் இடைக்கிடையே இவ்வூருக்கும் போக்குவரவுபண்ணிவந்த பிரபலியமான பீட்றோல்என்னும்உரு பிறகிட்ட ௰கூ ந் திகதி திருக்கோணமலையிலிருந்துஇவ்வூருக்கோடிவரும் வழியில் கோரைமேட்டிற்றும் சாலைமுகத்துவாரத்திற்குமிடையே புயலிலகப்பட்டுச்சேதம்போயிற்று. உயிர்ச்சேதமின்றி பொருட்சேதத்துடன்மட்டும்நின்றுவிட்டதற்காய்ச்சந்தோஷப்படுகிறோம். இவ்வுருவின்முதலாளிஇற்றைக்கு மூன்றுமாசத்துக்குமுன்தான்இவ்வுருவைக்கிரயத்துக்குக்கொண்டவர். விழுஞ்சிவரில் கைவைத்தவர்பாடாயிற்று இவர் அதிஷ்டம்.

## Death.—மரணசங்கதி.

வட்டுக்கோட்டைச் சாஸ்திரப்பள்ளிக்கூடத்தில் கல்விகற்று மானிப்பாய் அச்சியந்திரசாலையில் வெகுவருஷமாய் வேலையாயிருந்த மெ றகுலன் (Mr. Rowland) என்பவர் இந்தமாதம் உகூ ந் தேதி தேகவியோகமானார் என்றசஞ்சலசெய்தியைத் துக்கத்துடன் அறிவிக்கிறோம். இவர் ஓர் நல்லகிறிஸ்தவன்.

---

## Surgical Operation.—வயித்தியவிஷயம்.

இந்தமாதம் உ௬ ந் தேதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண ஆபத்துக்குதவிச்சங்கவயித்தியசாலையில் பெரும்புகழ்படைத்த இரணவயித்தியசிரோமணியாகிய டாக்குத்தர் கிறீன்துரை அவர்களால் வெகுகாலமாய்ச் சிலைப்பையில்வளர்ந்த ஓர் பெருங்கல்லையால் உவாதிப்பட்ட ஓர் இளைஞனின்வயிற்றைக்கீறி கழலையையெடுத்து இந்த இந்திரியின் உபத்திரவத்தைநீக்கினார். இவன் இன்னும் மேறபடி ஆசுபத்திரியில் இருக்கிறான் சீக்கிரம் சுகமடைவானென்று நம்புகிறோம். இவ்விதசத்திரவயித்தியம் யாழ்ப்பாணத்தில் இதுவேமுதல்முறை.

---

## கைதடி மணியகாரன்.

இவருக்குக் கன்னத்தில் ஒரு கட்டுக் கட்டி அதிக உபத்திரவப்படுகிறாரென்றும் அதினால் தலை கழுத்து நெஞ்சு முதலான பகுதிகள் அதிகம் வீங்கியிருக்கிறதென்றும் கேள்விப்படுவது நமக்கு அதிக துக்கம். டாக்தர் கிறீன் வைத்தியரிடம் போய்ப் பரிகாரஞ்செய்விப்பது மிகு நலமாயிருக்கும்.

---

## மறியல்வீட்டை விட்டுத் தப்பியோடின பிராமணன்.

இந்தப் பிராமண வாலிபன் பட்டப்பகலிலே மறியல்வீட்டிலிருந்தோடி இற்றைக்குப் பதினேந்திருபது நாட்களுக்குமேலேயாகிறது. அப்படியிருந்தும் இன்னும் அவனைப் பிடியாதது எங்கள் கவர்னமேந்தாரைப்பற்றி நயமான காரியமாகயிருக்கவில்லை. அவன் கொடிகாமப்பகுதியில் உலாவித்திரிகிறானென்றும் பலர் அவனைப் பலமுறையுங் கண்டார்களென்றும் கேள்விப்படுகிறோம். அவன் கண்டவர்களெல்லாரிடத்திலும் தன்னைக்கண்டோமென்று ஒருவருக்குஞ் சொல்லவேண்டாமென்று மன்றாடிக் கேட்டுக்கொண்டானாம். காரைக்காலுக்கல்லது புதுச்சேரிக்குப் போக ஆயித்தம்பண்ணுகிறானென்றுங் கேள்வி. இப்படியே இவனைப் பிடித்துக்கொள்ளும்படிக்கான முயற்சிகள் யாதுஞ்செய்யாதிருப்பது மிகக் குற்றமும் துரோகமுமான காரியம். சுவரிடித்துக் களவெடுத்த கள்ளன் ஆக்கினைபண்ணப்படாமலிருக்கலாமா. அரசாட்சியார் இவனைப் பிடித்தவனுக்கு அல்லது பிடிக்கும்படிக்கான உபாயங்கள் சொல்லிக்கொடுத்தவனுக்கு உபகாரம் கொடுப்போமென்று ஊருக்குள் பிரசித்தம்பண்ணுவித்தால் உடனே அகப்படுவானென்பதற்குச் சந்தேகமில்லை.

---

ஐயாவே,

சிற்றறிவினனாகிய அடியேனுடைய மனத்தை வெகுகாலமாய்க் குடிகொண்டு அதனை அறிவில் வரவொட்டாமல் எப்போதும் இருளிலே கிடந்துமயங்கும்படி வைத்து நீங்கா அரசியல்பண்ணிவந்த அறிவீனமாகிய இருட்பிளம்பை நீக்கி மனக்கண்ணை நுண்ணிய கருத்தினை ஆராயும்படிக்கு அறிவாகிய ஒளியை ஏற்றிப் பலவித நுட்பக்கருத்தினை ஆராய்ந்து அறிய உதவிபண்ணும்படி அறிவில் வளர்ந்து கல்வி என்னுங் கடலில் மூழ்கி நம் போலிய அறிவீனர்க்கு அறிவை ஊட்டும்படியாய் அகமகிழ்ந்திருக்கும் பண்டிதர்களே அறிவில்வளர்ந்த பெரியோரே பின்னால்வருஞ் சில வினாக்களை அபிமானிவழியாய் நமக்கு விடுக்கும்படி மன்றாடிக் கேட்கிறேன்.

நவராத்திரிசு, சரசுபதிபூசை, ஆயுதபூசையென்றும் பத்தாம் நாளை விசயதசமியெனக்கொண்டு விக்கிரகத்தைப் பிரவேசிக்கப்படுத்தி வாழையை நாட்டி அதனை வன்னிமரமெனப்பாவித்து வெட்டுகிறார்கள். வாழையை வன்னிமரமெனக் கொள்வானேன். நவராத்திரிப் பூசை வருவதற்கானகாரணம் யாது. இதைக்குறித்த யாவையும் அதிகம் பூரணமாகவும் விளம்பரமாகவும் இப்புதினம்வழியாய் விடுக்கும்படி மன்றாடுகிறேன்

இங்ஙனம், வினாவுவோன்.

---

ஐயாபத்திராதிபரே,

இன்றுநேற்றுவந்தவழமையல்லப் புராதனமாயுள்ள விதியே சிறீ. நீலகண்டக்குருக்கள் கைக்கொண்டு உச்சவக்கிரியைகளைச் செய்துவருமுறை. முத்தைய்யாக்குருக்கள் சாத்திகேசக்குருக்கள் உங்களுடைய சென்றுபோன ஆவணிமாதத்தில் ஓர் பத்திரிகையில் எங்கள் குருக்களைக் குற்றஞ்செய்தாரென வேண்டியவாறேசொல்லிப் புகுந்தார். கந்தசுவாமியின் சத்திகட்கு இரட்சாபந்தனம் வலக்கையில் தரித்திருந்தார்களெனக்காட்டிக் குற்றம்பேசினார் அப்படி அவர்பேசுதற்குபேதவுமுளா. எங்கள் குருக்களது பூர்வீகபரம்பரையாய்ச் செய்துவந்த உச்சவத்தை இவர் தாம்செய்யவிரும்பியவழியே சத்திகட்கு இடக்கையிற்கட்டிய இரட்சாபந்தனத்தைத் திரும்பமற்றைநாள் அக்கோவிலர்ச்சகர்கள் வலக்கையிற்கட்ட இவரிப்போ திருக்கறுக்கவந்து வாதிக்கப்புகுந்தமை குருக்கள் தீபாராதனைசெய்யப்புகுந்த காலத்தில் தீபாரோகணஞ்செய்து கொடுக்கமாட்டோமென்று கோவிலர்ச்சகர்கள் கூறினராமே. அதன்றியும் உச்சவத்தில் இரண்டு மூன்றுதினமாகத்தேவாரமோதிவந்த காத்திகேசக்குருக்களின் பெந்துக்கள் நாமினிச்செய்யோமென மறுக்கித்தலைதூக்கிகின்ற அவர் அதைச்செய்பவும் அதை அறிந்திருந்தும் அறியாதார்போன்று குருசிகாமணியெனக் கையொப்பத்தில் பழிக்கஞ்சாதுவசைகூறி வடுமனங்கொடுவஞ்சகஞ்செய்பவர்கெடுவரென்பதுங் கேட்டறியாமல் விற்பனமாய்க் கந்தசுவாமியின் உற்சவத்துக்கு வாத்துசாந்திசெய்திலரென்றுரே. வாத்துசாந்தி பிள்ளையார் உச்சவத்துக்கன்றி வேறொருநிமித்தமாயுஞ்செய்யாமலிருக்க கந்தசுவாமிக்கு மூலவிக்கிரகமும் ஆலயமும் இல்லாவிடத்து வாத்துசாந்திசெய்யும்படி விதிகற்றிலோம்.

மூன்றுவதாய் திருத்தோற்சவத்திற்சொல்லிய சூரனோச்சவத்திலே பேரிதாடனஞ்செய்யவேணுமென்று வைநாயகதந்திரத்திலுமில்லை குமாரதந்திரத்திலுமில்லை. சிறீ. சோமசுந்தரக்குருக்களென்பவர் கருஷணாதிபிரதிஷ்டாந்தம் பிரதிஷ்டாதி உற்சவாந்தம் உற்சவாதிபிராயச்சித்தாந்தமான கிரியாக்கிரமங்களைச்செய்விக்க மகாநிபுணர். சிறீ. நீலகண்டக்குருக்களோவெனில் கைதடியிற்பிள்ளையார்கோவில் உற்சவம் நீர்வேலிவாய்க்கால்தரவைப் பிள்ளையார்கோவில் உச்சவம் சிவியாதெருவிற் சித்திவிநாயகன்கோயில் உச்சவம் இவைகளை இவர்முன்னோர் நடத்திவந்தபடி இவருமாறேழுவருடக்காலமாக நடத்திவருகிறார். யாதொருதவறுங்காணவில்லையே இப்பயிவர் பெருந்தவறுசெய்[illegible]வதாயும் [illegible] விதிப்படி

கொள்வோமோ அப்படியேல் அவரினுந்தவறில்லை சொல்லுவார்சொன்னாலுங் கேட்பார்க்குமதியில்லையென்றே இவரிட்டுரைத்தது.

இங்ஙனம் ஓர் சிவதாசன் உங்கள்நேசன்.

துன்மதி௵ ஆண்டு அற்பசி மாதம் உகூ ந்தேதி.

---

## படிக்காரம் அல்லது சீனக்காரம்.

(௱௭௨ ம் பக்கத் தொடர்ச்சி.)

அ. நரையிரல் இரைக்குடல் முதலிய உள்ளான உறுப்புகளில் நின்று இரத்தப்போகிறதற்கு படிக்காரம் அ அல்லது ௰ கிறேன் ஒருதரம் உள்ளுக்குக் கொடுத்து இந்தப்படி தினம் மூன்றுதரம் கொடுக்கவும். இதினுடன் சுரமாவது மேற்சூடாவது உண்டாயிருக்கில் மேற்சொன்ன ஒளஷதம் கொடுக்காமலிருக்கிறதும் தவிர இரண்டொருதரம் கொடுத்தபின் வியாதி அதிகப்பட்டால் பின்பு கொடுக்கக்கூடாது. மேற்படி வியாதிகளுக்கிசைந்த வேறொரு பிரயோகம் எப்படியென்றால் ௱உ௰ கிறேன் படிக்காரத்தை அரைப்புட்டி போத்தல் பாலிலிட்டு ஒரு புதுச்சட்டியில் வார்த்து அடுப்பில்வைத்து பத்துமினிட்டு நேரம் காச்சுடனே சீலையில் வடிகட்டிக்கொண்டு ஆறினபின் ஒருதரத்துக்கு ஒன்றரை அவுன்ஸ்வீதம் தினம் மூன்றுநேரம் கொடுக்கவும். இதினுடன் ஒரு கிறேன் அபினுங் கூட்டிக்கொடுத்தால் மிகுந்த பலனுண்டாகும். ஆனால் இப்படி அபினுடன் பிராயமானவர்களுக்கு மாத்திரமே கொடுக்கக்கூடும். பெண்களுக்குச் சுரோணிதநீர் அதிகமாயும் இடைவிடாமலும் போகிறதற்கும் மூலமுளையில் நின்று இரத்தம்போகிறதற்கும் மேற்சொன்ன ஒளஷதம் பிரயோசனப்படும்.

௯. தொண்டையில் புண்ணாய் அல்லது சிவப்பாயிருக்கிற தொண்டைநோய்க்கு ௬௰அ வது பிரிவிற்சொல்லியிருக்கிற கடுக்காய்க் கஷாயம் அரைப்போத்தலில் ௱உ௰ கிறேன் படிக்காரத்தைச் சேர்த்து கொஞ்சத் தேனுங் கூட்டி தினம் மூன்று நாலு வேளை இந்தச் சலங்கொண்டு வாயலம்பவும். இரசத்தில் ஒளஷதம் சாப்பிட்டதினாலாவது மற்றெந்தக் காரணத்தினாலாவது பலவீறினுண்டாகும் இரணம் முதலிய வியாதிக்கு படிக்காரத்தைக் கடுக்காய்க் கஷாயத்திற் கலக்கி வாயைக் கழுவினால் குணமுண்டாகும். இதுவும் தவிர சிறு குழந்தைகளுடைய வாயிலுண்டாகும் வெண்ணிறமான புண்களுக்கு உ௰ கிறேன் படிக்காரத்தை ஒரு அவுன்ஸ் தேனிற் சேர்த்து அதை விரலால் தொட்டு வாயினுள் பூசவும்.

௰. குழந்தைகளுக்குக் கக்கி நமல் உண்டானால் மூன்று கிறேன் படிக்காரத்தை அனுக்கி தேனில் கலக்கிக்கொண்டு இந்தவிதம் ஒருநாளில் இரண்டு மூன்றுதரம் கொடுக்கவும். இதனாற் குணங்காணாவிட்டால் படிக்காரத்தினிடையை அதிகமாக்கி அதினுடன் கொஞ்சம் காயமும் சேர்த்துக்கொண்டால் பெருங்காயம் மிகுந்த குணத்தைக் கொடுக்கும். காயத்தைக் குறித்துச் சொல்லியதில் காண்க.

இன்னும்வரும்.

---

ஐயா அபிமானியே,

சென்ற வாரச் சங்கிலையயில் ம ஶ ஶ கொழும்பு இன்றுபெங்குச் சிறுப்பர் திருமேனியார் குழந்தைவேலுப்பிள்ளை அவர்களுக்கு ம ஶ ஶ பிறக்கிராசியார் மயில்வாகனம்பிள்ளையவர்களும் ம ஶ ஶ வடமிருட்சி மணியம் வயித்திலிங்கமுதலியார் அவர்களும் ஆடல்பாடல் முதலிய காட்சியுடனே விருந்திட்ட சிறப்பை விளம்பரித்திருக்கக் கண்டேன். இப்பவும் சென்றுபோன ஆதித்தியவாரத்தில் மேற்படி குழந்தைவேலுப்பிள்ளையவர்களுக்கு வல்லுவெட்டித்துறை ரேகாதிகாரியாகிய சுப்பிறமணியபிள்ளையவர்களும் தனது வங்களாவில் ஆடல்பாடல் முதலிய காட்சியுடனே ஒரு பெருவிருந்திட்டார். அதன் காட்சிகளைக்காணும்படிக்கு அவ்விடத்திற்கு யானும் சென்றேன் சென்றபோதுமேற்படி வங்களா குதிரைவண்டிகளாலும் காடிவண்டிகளாலும் நிரைக்கப்பட்டிருந்தன. பின்பு மண்டபத்துக்குட் சென்றேன். மேற்படி குழந்தைவேலுப்பிள்ளையவர்களை ம ஶ ஶ மணியம் வயித்திலிங்கமுதலியாரவர்களும் பிறக்கிராசியார் மயில்வாகனம்பிள்ளை அவர்களும் இன்னும் அநேக பிரபுக்களும் வர்த்தகர்களும் தலைமைக்காரர்களும் பலபல கந்தோர்களிலிருக்கும் உத்தியோகஸ்தர்களும் சூழ்ந்திருப்பதை எனது கண்கள் கண்டு களிகூர்ந்தன. அவ்விடத்தில் நடந்த சங்கீத வாத்திய கீதங்களின் ஒலிகள் எவர்களுடைய காதுக்கும் இனிமை கொடுத்தன. அவ்விருந்தைச் சங்கிக்கும்படி அத்துறைமுகத்தில் கட்டப்பட்டிருந்த கப்பல் சலுப்புத் தோணி படவு முதலிய மரக்கலங்களில் துவசங்கள் வரிசையாயிருக்கப் ட்டிருந்தன. அவ்வுருக்களிலிருக்கும் பீரங்கிகள் சப்தித்தசப்தத்தினொலி இடையிடையே நமது பரோபகாரியாகிய குழந்தைவேலுப்பிள்ளையவர்களைக் காணவருபவர்கள் வந்து காணுங்கள் காணுங்களென்று அழைத்ததன்மைபோலிருந்தன. அவ்விடத்தில் குழந்தை வேலுப்பிள்ளையவர்களுக்கும் மற்றும் பிரபுக்களுக்கும் நடந்த விருந்தின் சிறப்பையும் அவர்களுக்கு நடந்த மரியாதையையும் என்னால் இவ்வளவென்று சொல்ல முடியாது. அவ்விடத்திலிருந்த ஒரு பிரபுவிடத்திலிப்படியொரு விருந்திடுவதற்கு முகாந்தரமென்னவென வினாவினேன் அவர் அதற்கு மறுத்தரமாய்த் தன்னை அந்தச்சபைக்கு அழைத்த அழைப்புப்பத்திரத்தை என்னிடந் தந்தார் அதிற்கண்டிருந்த வாசகமாவது—ஐயாவே கொழும்புவங்கிச்சிருப்பு திரு. குழந்தைவேலுப்பிள்ளை இப்போ இவ்விடத்தில் வந்திருப்பதாலும் இவர் யாழ்ப்பாணத்திலிருந்து போபவர்களெவர்களாயிருப்பினும் அவர்களவர்கட்குத்தகுந்தபடி மரியாதையும் உபகாரமும் பண்ணுபவராயும் அதிகதருமசிந்தையுள்ள பரோபகாரியெனப் புகழைப்பெற்றவராயும் இருப்பதால் அவருடைய நற்குணங்களை எவர்களுடைய உள்ளத்திலும் உணர்த்தும்படிக்கு வருகிற ஞாயிற்றுக்கிழமைகாலமே பதினொருமணிக்குநானிருக்கும் வங்களாவில் ஆடல்பாடல்முதலியகாட்சியுடனே ஒருவிருந்திடவெண்ணியிருப்பதால் அந்தவிருந்துக்குத் தங்களையும்வரும்படிக்கேட்குந்தங்கள் நண்பன் ஆ. சுப்பிரமணியம்—என்றிருந்தது.

பத்திராதிபதியே, மேற்படி கண்டிருக்கிற சங்கிலையை நீர் எவர்களும் அறியும்படிபண்ணி யாழ்ப்பாணத்திலிருந்து மறுதேசங்களுக்கு வியாபாரமாயும் உத்தியோகமாயும் போயிருக்கும் சகலாகளையும் மேற்படி குழந்தைவேலுப்பிள்ளையவர்களுடைய நற்செய்கைகளைப் பின்தொடர்ந்து எவர்களுக்கும் பிரயோசனமுள்ளவர்களாய்வந்து இவ்வித மேன்மையான புகழைப்பெறும்படி உணர்த்துவீரெனக் கேட்கிறேன்.

இங்ஙனம், வடமிருட்சி ஒரு உலோகோபகாரி.

---

Edited by C. W. CATHERAVALUPULLY and Printed and Published by N. STRONG at the Press of RIPLEY & STRONG Manepay, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org